நியூ சவுத் வேல்ஸ் தமிழ்ப் பாடசாலைகள் கூட்டமைப்பு

**NSW Federation of Tamil Schools Inc.**

# 2020

## கலாநிதி வேந்தனார் இளங்கோ ஞாபகார்த்த தமிழ்ப் புலமைச் சான்றிதழ்ப் பரீட்சை

## Dr Venthanar Ilango Memorial Tamil Proficiency Examination

### தரம்: இடைநிலை மேற் பிரிவு (ஆண்டு 9, 10)

**Level : Intermediate Upper (Year 9 & 10)**

**வழங்கப்படும் நேரம் : 90 நிமிடங்கள்**

Time Given : 90 Minutes

**உங்களுக்குத் தரப்பட்ட விடைத்தாளில் பதில்களைத் தருக.**

**ஆசிரியரின் கவனத்திற்கு :**

**மாணவர்கள் தாமாகவே வாசித்து பதில் அளிக்க வேண்டும்.**

**(ஆசிரியர்கள் வாசிப்பதில் உதவி செய்யலாகாது)**

November 2020

**வினாக்கள் 1 - 5 : பின்வரும் பாடலை வாசித்து பொருத்தமான விடையினைத் தெரிவு செய்க.**

**ஒற்றுமையே வலிமை**

அங்கோர் ஆற்றங் கரைதனிலே அழகிய காளைகள் ஈரிரண்டு
நன்றாய்ப் புல்லை மேய்ந்திருந்து ஒற்றுமையோடு வாழ்ந்தனவே!
கறுவல் சிவலை செங்காரி காலிற் சிலம்பன் அவையாகும்.

ஆற்றங் கரையின் செழிப்பினிலே அறுகம் புல்லுச் செழித்திருக்க,
அன்பாய்த் தம்முள் இடந்தேர்ந்து அவ்வவ் விடங்கள் தமக்குரித்தாய்
அன்பாய் மேய்ந்து திரிந்தனவே!

இந்தக் காளைகள் தமைக்கண்டு, இருந்தார் சிங்கம் நாள்பார்த்து
நன்றாய்க் கொழுத்த காளையிவை நாவினுக் கினிமை தந்திடுமே!
என்றோ ஒருநாள் வருமென்று எண்ணி யெண்ணி இருந்தாரே!

ஆன்றோர் நாளின் அதிகாலை நின்றார் சிங்கம் காட்டருகில்
காளைகள் நான்கும் தம்நிலத்தில் தனித்தனி நின்று மேய்கையிலே,
வாயில் உமிழ்நீர் ஊறிவர வாய்த்த சமயம் இதுவென்று
வாகாய்த் தாக்கினார் கறுவலினை. - அழலாடி

1. இப்பாடலில் வந்த விலங்குகள் எவை?

   அ) சிங்கம், புலி ஆ) சிங்கம், காளை இ) புலி, காளை ஈ) புலி, சிவலை

2. இந்தப் பாடலில் எத்தனை காளைகள் பற்றிக் கூறப்படுகின்றது?

   அ) 1 ஆ) 2 இ) 3 ஈ) 4

3. காளைகள் எங்கே புல் மேய்ந்தன

   அ) ஆற்றங்கரையில் ஆ) காட்டருகில்
   இ) வீட்டருகில் ஈ) மலையருகில்

4. காளைகளைக் கண்ட சிங்கம்:

   அ) அவற்றுடன் நட்புக் கொள்ள நினைத்தது ஆ) அவற்றுடன் விளையாட நினைத்தது
   இ) அவற்றைச் சாப்பிட நினைத்தது ஈ) அவற்றுடன் புல் மேய நினைத்தது

5. "வாய்த்த சமயம் இதுவென்று……" என்ற சொற்றொடருக்குப் பொருத்தமான பழமொழி

   அ) ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு ஆ) காற்றுள்ள போதே தூற்றிக் கொள்
   இ) கூடிவாழ்ந்தால் கோடி நன்மை ஈ) ஊரோடு ஒத்து வாழ்

**வினாக்கள் 6 - 10 : பொருத்தமான விடையினைத் தெரிவு செய்க.**

6. ஐம்பதாவது ஆண்டின் இறுதியில் எடுக்கப்படும் விழா

அ) பொன்விழா ஆ) வெள்ளிவிழா இ) பவளவிழா ஈ) வைரவிழா

7. நிகழ்ச்சி ஒன்றினை மேடையேற்றுவதற்கு முன்னர் சரி பிழை பார்க்கப்படுவது

அ) அரங்கேற்றம் ஆ) ஒத்திகை இ) கலைவிழா ஈ) பயிற்சி

8. மலையும் மலை சார்ந்த பிரதேசம் எனப்படுவது

அ) முல்லை ஆ) குறிஞ்சி இ) பாலை ஈ) மருதம்

9. தமிழர்களின் பாரம்பரியக் கலைகளில் அடங்காதது

அ.) கூத்து ஆ) தமிழிசை இ) பறை ஈ) கர்நாடக சங்கீதம்

10. வானம் அறிந்த தனைத்தும் அறிந்து
வளர்மொழி வாழிய வே! என வாழ்த்தியவர்

அ) பாரதிதாசன் ஆ) பாரதியார் இ) வள்ளுவர் ஈ) கம்பர்

**வினாக்கள் 11 - 15 : சரியான சொல்லினைத் தெரிவு செய்க.**

11. அ) பிரச்சனை ஆ) பிரச்சினை இ) பிரட்சனை ஈ) பிறச்சனை
12. அ) வாழ்கை ஆ) வாழ்க்கை இ) வாள்க்கை ஈ) வால்க்கை
13. அ) தேனீர் ஆ) தேநீர் இ) தேணீர் ஈ) தேநிர்
14. அ) விளையாட்டு ஆ) விலையாட்டு இ) விழயாட்டு ஈ) விழையாட்டு
15. அ) கலாசாரம் ஆ) கலாச்சாரம் இ) கலாசாறம் ஈ) கலாசரம்

**வினாக்கள் 16 - 20 : வேறுபட்ட சொல்லைத் தெரிவு செய்க.**

16. அ) பரம்பரை ஆ) தலைமுறை இ) சந்ததி ஈ) பூர்வீகம்
17. அ) ஆற்றுநீர் ஆ) மழைநீர் இ) ஊற்றுநீர் ஈ) இளநீர்
18. அ) நிலா ஆ) மதி இ) ஆதவன் ஈ) சந்திரன்
19. அ) ஜல்லிக்கட்டு ஆ) கபடி இ) கிளித்தட்டு ஈ) வலைப்பந்து
20. அ) பாரதிதாசன் ஆ) பாரதியார் இ) இளங்கோவடிகள் ஈ) ஔவையார்

**வினாக்கள் 21 - 25 : பின்வரும் ஆங்கிலச் சொற்களுக்குப் பொருத்தமான தமிழ்ச் சொற்களைத் தெரிவு செய்து எழுதுக.**

அ) கீச்சகம் ஆ) பற்றியம் இ) அருகலை ஈ) ஒளிவீச்சி உ)அச்சுப்பொறி

21. WiFi : .................................................................
22. Projector : .................................................................
23. Twitter : .................................................................
24. Messenger : .................................................................
25. Printer : .................................................................

**வினாக்கள் 26 - 30 : பினவரும் பாத்திரப் படைப்புக்கள் இடம் பெற்ற இலக்கியங்களைத் தெரிவு செய்து எழுதுக.**

அ) கம்பராமாயணம் ஆ) மகாபாரதம் இ) நளவெண்பா ஈ) சிலப்பதிகாரம்

26. திரௌபதி : .................................................................
27. மண்டோதரி : .................................................................
28. மாதவி : .................................................................
29. தமயந்தி : .................................................................
30. திரிசடை : .................................................................

**வினாக்கள் 31 - 35 : பின்வரும் அடுக்குத் தொடர்களை பொருத்தமான இடைவெளிகளில் எழுதுக.**

அ) கிடு கிடு ஆ) கம கம இ) டாண் டாண் ஈ) தட தட உ) கட கட

31. முற்றத்தில் மல்லிகை ................................ என மணம் வீசியது.
32. நள்ளிரவில் திருடன் ................................ என ஓடினான்.
33. அதிகாலையில் கோயில் மணி ................................ என ஒலித்தது.
34. இடி முழக்கத்தில் கதவு ................................ என ஆடியது.
35. மாணவர்கள் வகுப்பு வேலையினை ................................ எனச் செய்து முடித்தனர்.

**வினாக்கள் 36 - 40 : பின்வரும் சொற்களைச் சேர்த்து எழுதுக.**

36. வான் + ஒலி : ..............................................................................
37. மின் + அஞ்சல் : ..............................................................................
38. பெருமை + இன்பம் : ..............................................................................
39. வெண்மை + பலகை : ..............................................................................
40. தெற்கு + திசை : ..............................................................................

**வினாக்கள் 41 - 45 : தரப்பட்ட உரைப்பகுதியை வாசித்து அதன் கீழுள்ள வினாக்களுக்குப் பொருத்தமான விடையை எழுதுக.**

**நட்பின் சிறப்பு**

மாமல்லபுரத்தைச் சிறப்பக் காடாக்கியவன் மாமல்லன் எனப்படும் நரசிம்மபல்லவன். இவனது இளமைப் பருவத்திற் காஞ்சியிலே உள்ள பள்ளியில் மாமல்லனுடன் கல்வி கற்றவன் பரஞ்சோதி. நரசிம்மன் மன்னனின் மகன். பரஞ்சோதி தொழிலாளியின் மகன். இவன் தந்தை இறந்துவிடத் தாயால் வளர்க்கப்பட்டவன். ஏழ்மையிலும் தன்மகனைச் சான்றோனாய்க் காண காஞ்சியில் உள்ள பள்ளிக்கு அனுப்பியிருந்தாள் அந்தத் தாய். பள்ளியிலே பரஞ்சோதியும் மாமல்லனும் நண்பர்களாயினர். இருவரிடமும் அஞ்சாமையும் அன்புணர்வும் குடிகொண்டிருந்தன. அதனால், அவர்களது நட்பு வளர்பிறைபோல் வளர்ந்தது. மாமல்லனின் தந்தையும் பரஞ்சோதியிடம் அன்பு கொண்டிருந்தார். இக்கால வேளையில் வடவருடன் ஏற்பட்ட போரில் மாமல்லனின் தந்தை மகேந்திரபல்லவன் வீரச்சாவடைந்தார். அதனால், கல்வி கற்றுக் கொண்டிருந்த இளைஞனான மாமல்லன் ஆட்சிப் பொறுப்பை ஏற்க வேண்டியதாயிற்று. பதினெட்டு அகவை நிறைந்த மாமல்லன் தன் நண்பன் பரஞ்சோதியைப் படைத்தளபதி ஆக்கினான். இளைஞர்களான இருவரும் மகேந்திர பல்லவனின் சாவிற்குக் காரணமாய் இருந்த வடவன் புலிகேசியைப் பழிவாங்க வடதிசை நோக்கிப் படையெடுத்தனர். அந்தப் படையெடுப்பின் தளபதியும் பரஞ்சோதிதான். பரஞ்சோதி புலிகேசியின் வாதாபி நகரை வெற்றிகொண்டு தமிழன் வீரத்தை நிலை நாட்டினான். கோட்டை கொத்தளங்களையும் நகரையும் தீக்கிரையாக்கி அழித்து மீண்டான். இவ்வீர வரலாறு மாமல்லன், பரஞ்சோதி ஆகியோரின் நட்பினால் விளைந்தது எனப் போற்றப்படுகிறது.

41. ஏழ்மையிலும் பரஞ்சோதியின் தாய் எதை விரும்பினார்?

..............................................................................................................................................

42. மாமல்லனின் தந்தையின் பெயர் என்ன?

..............................................................................................................................................

43. பரஞ்சோதி, மாமல்லரின் நட்பு எதைப் போன்று வளர்ந்தது என்று கூறப்படுகின்றது?

..............................................................................................................................................

44. வாதாபியை அழித்த வீர வரலாறு எதனால் விளைந்தது?

..............................................................................................................................................

45. புலிகேசி என்பவன் யார்?

..............................................................................................................................................

46. **எழுத்தாக்கம் : பின்வரும் தலைப்புக்களில் ஒன்றினைத் தெரிவு செய்து 150 சொற்களுக்குக் குறையாமல் எழுதுக.** (20 புள்ளிகள்)

அ) ''ஆரோக்கிய உணவும், வாழ்வும்'' எனும் தலைப்பில் பேச்சு ஒன்றினை எழுதுக.

ஆ) உமது எதிர்கால இலட்சியம் என்ன என்பது பற்றி உமது நண்பருக்குக் கடிதம் ஒன்று எழுதுக.

*திட்டமிடல் :*

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

நியூ சவுத் வேல்ஸ் தமிழ்ப் பாடசாலைகள் கூட்டமைப்பு

**NSW Federation of Tamil Schools Inc.**

# கலாநிதி வேந்தனார் இளங்கோ ஞாபகார்த்த தமிழ்ப் புலமைச் சான்றிதழ்ப் பரீட்சை

## Dr Venthanar Ilango Memorial Tamil Proficiency Examination

# 2020